செய்தி வெளியீடு எண்: 187 நாள் : 09.04.2016

## செய்தி வெளியீடு

**தேர்தல் விதிமீறல் – உரிய ஆவணங்கள் இல்லாமல் கொண்டு சென்ற வெள்ளி, கேஸ் ஸ்டவ்கள், மதுவகைகள் பறிமுதல் – இதவரை ரூ. 21.31 கோடி ரொக்கம் பறிமுதல் – 9.4.2016 வரை 2.90 லட்சம் புகார்கள்.**

•••••

தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தல் நன்னடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்துள்ளதால், பறக்கும் படையினர் 7.4.2016 அன்று சோதனை செய்தபோது மொத்தம் ரூ. 10,06,500/– ரொக்கமும், நிலையான கண்காணிப்புக் குழுவினர் சோதனை மேற்கொண்ட போது, ரூ.5.45 லட்சம் ரொக்கம் மற்றும் 38.985 கிலோ வெள்ளி பொருட்கள், 49 கேஸ் ஸ்டவ்கள், மதுவகைகள் உட்பட பலபொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

பறக்கும் படையினர் 8.4.2016 அன்று சோதனை மேற்கொண்டபோது, ரூ.8,10,070/– ரொக்கமும், நிலையான கண்காணிப்புக்குழுவின் (SST) சோதனையில் ரூ. 54,02,000/– ரொக்கமும், வேஷ்டி, புடவைகள், 1500 காசியோ கைகடிகாரங்கள் ஆகியவைகள் பறிமுதல் செய்யப்பட்டது.

இதுவரை நிலையான கண்காணிப்புக் குழுவினரால் மொத்தம் ரூ. 12,71,83,424/– ரொக்கமும், பறக்கும் படையினரால் ரூ. 8,59,04,730/– ரொக்கமும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

அனுமதியில்லாமல் போஸ்டர்கள் ஒட்டியது, கட்சி கொடிகளை அகற்றாதது உட்பட பல்வேறு விதிமீறல்கள் தொடர்பாக கட்சியினர் மீது வழக்கு பதியப்பட்டுள்ளது.

தேர்தல் விதிமுறைகளை மீறி சுவர் விளம்பரம், போஸ்டர், பேனர்கள் போன்ற விளம்பரங்களை மேற்கொண்டதாக இதுவரை 2,90,008 புகார்கள் பெறப்பட்டதில் 2,81,408 புகார்களில் விளம்பரங்கள் அழிக்கப்பட்டுவிட்டன.

••••

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**